<u>செய்தி வெளியீடு எண். 982</u> <u>நாள். 17.12.2009</u>

# <u>பத்திரிக்கை செய்தி</u>

**6522** பி.எட்., பட்டதாரிகளுக்கான பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்படவுள்ளன. பட்டியல் அனுப்பப்பட்ட பிறகு வெவ்வேறு காரணங்களைக் கூறி தங்களது பெயர்கள் விடுபட்டதாகக் கூறி பதிவுதாரர்கள் வருகிறார்கள். எனவே, மொத்த பி.எட்., பதிவுதாரர்களின் உயிர்ப்பட்டியல் என்.ஐ.சி. **(NIC)** வெப்சைட்டில் அந்தந்த மாவட்டங்களில் வெளியிடப்பட்டு, பதிவை சரிபார்த்துக் கொள்ளும் பணி **09.12.2009** முதல் நடந்து வருகிறது. **21.12.2009** வரை பதிவுதாரர்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் விவரங்கள் சரியாகவுள்ளவர்கள் கூட, நூற்றுக்கணக்கில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு தினமும் வந்து சரிபார்த்து செல்கின்றனர். பெயரில் எழுத்துக்கள் மாற்றம், இனிசியல் மாற்றம், படித்த பட்டத்தின் குறியீடு எண் மாற்றம், முகவரி மாற்றம், மொழி மாற்றம், ஓ.சி.யில் இருந்து பி.சி.,, எம்.பி.சி., என அவ்வப்போது மாற்றம், முஸ்லீம் இனத்தவர்களுக்கான தனிப்பதிவு எண்கள் பெறுதல், இரு பாடப்பிரிவுகளில் பட்டம் பெற்றவர்களுக்கு தனித்தனி பதிவு, முன்னுரிமை பெறுவதற்கான பதிவுகள் போன்ற புதிய மாற்றங்களுக்கான மனுக்கள் பெறப்படுகின்றன. பதிவுகள் சரிபார்க்கப்பட்ட பிறகு பதிவு மூப்பின் அடிப்படையில் **1 : 5** விகிதத்தில் **6522** காலியிடங்களுக்கு பட்டியல் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்படும். முன்னுரிமையற்றவர்களுக்காக பள்ளிக்கல்வித் துறையில் **1554** காலியிடங்களும், தொடக்கக் கல்வித் துறையில் **4778** காலியிடங்களும் முன்னுரிமை பார்வையற்றோருக்காக **48** காலியிடங்களும், உடல் ஊனமுற்றோருக்காக **142** காலியிடங்களும் நிரப்பப்படவுள்ளன. பி.எட்., படித்த **1,37,091** பட்டதாரிகள் உயிர்ப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதுவரை **11,339** பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. **32** மாவட்டங்களிலும் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் சரிபார்ப்புப் பணி நடந்து வருகிறது. **2006**ம் ஆண்டு வரை இருந்த பணி நியமன தடைச் சட்டம் அரசால்

விலக்கிக் கொள்ளப்பட்டு, அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் காலியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. இதுவரை 81,236 நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 1985ம் ஆண்டு முதல் 2009 வரை பதிவு செய்தவர்களில் நூற்றுக்கணக்கான நபர்கள் தினமும் வந்து விவரங்களை சரிபார்த்து செல்கின்றனர். வேலூரில் 1050 நபர்கள், சிவகங்கையில் 468 நபர்கள், மதுரையில் 474 நபர்கள், தர்மபுரியில் 300 நபர்கள் என அனைத்து மாவட்டங்களிலும் பதிவுகளில் திருத்தம் செய்துக் கொண்டுள்ளனர்.

பதிவுமூப்பின் அடிப்படையில் பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதால் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் மனுதாரர்களின் பதிவுமூப்பு விவரங்கள் இணைய தளத்தில் வெளியிடப்படுகின்றன. விடுபாடுகளின்றி பரிந்துரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெளியிடப்பட்ட பட்டியல் பரிந்துரை பட்டியல் அல்ல என்பதையும், பதிவுதாரர்கள் பதிவு விவரங்கள் சரிபார்த்துக் கொள்ள கொடுக்கப்பட்ட வாய்ப்பு என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, பி.எட்., படித்த பட்டதாரிகள் எவரும் பெயர்கள் விடுபட்டு இருக்குமோ என அஞ்ச வேண்டாம் எனவும் அனைத்துப் பதிவுகளும் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவேடுகளில் பராமரிக்கப்படுகின்றன எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், 21.12.2009க்குள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி பதிவுகளை சரிபார்த்து திருத்தங்களை செய்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒப்பம்/— ஆ.சு.ஜீவரத்தினம், இ.ஆ.ப.,
ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.